## DATES TO REMEMBER

**BIRTHDAYS:**

| | |
|---|---|
| 02-12-2019 | Fr. Antony Paulraj |
| 06-12-2019 | Fr. A. James |
| 12-12-2019 | Fr. S.J. Savarimuthu (Sr) |
| 16-12-2019 | Fr. A. Kulandaisamy |
| | Fr. Susai Alangaram |
| 18-12-2019 | Fr. A. Francis Xavier |
| | Fr. I. Thomas Arputharaj |
| 21-12-2019 | Fr. A. Jeyaraj |
| 27-12-2019 | Fr. S. Kulandaisamy |
| 29-12-2019 | Fr. I. David Raj |
| 30-12-2019 | Fr. A. Victor Jeyabalan |
| 31-12-2019 | Fr. A. Sahaya Jayakumar |

**ORDINATION ANNIVERSARY:**

| | |
|---|---|
| 04-12-2019 | Fr. D. Arul Sahaya Raj |
| | Fr. I. David Raj |
| | Fr. J. Jerome Gnana Prabu |
| 05-12-2019 | Fr. Leo Melquir Babu |
| | Fr. A. Sahayaraj |
| 08-12-2019 | Fr. K. S. Arputhasamy |

## NECROLOGY

Kindly remember them in your prayers

| Date | Name | Year of Death |
|---|---|---|
| 04-12-2019 | Fr. A. Susaimanickam | 1963 |
| 08-12-2019 | Fr. Yagappanathar | 1979 |
| 05-12-2019 | Fr. Antony Rosario | 2016 |
| 13-12-2019 | Fr. P. Ignatius | 1986 |
| 20-12-2019 | Fr. D. Savariraj | 1998 |
| 24-12-2019 | Fr. B.A. Marianayagam | 1982 |
| 25-12-2019 | Fr. R. Alphonse | 1976 |
| 27-12-2019 | Fr. M. Pinto | 1974 |
| | Fr. R. Maria Susai | 2013 |

**REMEMBERING**

Bishop **PETER FERNANDO**

Died : 31.12.2016

Administrator of the Diocese of

Tiruchirapalli (1997-2000)





**From the Apostolic Administrator**

# THE ADVENT

Dear Fathers, Sisters and the Faithful,

The coming of Advent brings us a sense of excitement and anticipation. Advent is 4 week period of preparation before Christmas when the Church celebrates the First coming of Christ and anticipates his Second coming. This year Advent begins on 1st December. Since advent looks forward Christ's coming, the liturgical year also begins with advent.

The word advent is derived from the Latin word "*Adventus*" which means "coming" or "arrival". The season of Advent is focused on the "coming" of Jesus as Messiah (Anointed King). The prayers and other symbols used in the liturgy not only prepare us spiritually for Christmas (His first coming) but also for his eventual second coming. This is why the scripture readings during Advent include both the First coming and the Second coming of Christ. The Old Testament passages are related to the expectation of Messiah from the Israel's great patriarchs Abraham, Ruth, David and Isaiah. The New Testament passages are related to the second coming of Jesus in his glory as judge of all peoples and also the passages concerning John the Baptist, the precursor who prepared the way for the Messiah are read.

The Catechism of the Catholic Church says the following: "When the Church celebrates the liturgy of Advent each year, she makes present the ancient expectancy of the Messiah, for by sharing in the long preparation for the saviour's first coming, the faithful renew this ardent desire for his second coming. By celebrating the precursor's birth and martyrdom, the Church unites herself to his desire: "He must increase but I must decrease" (No. 524)

The first two Sundays invite us to prepare for the second coming of Christ at the end of time and the next two Sundays invite us to remember and celebrate His first arrival at Christmas. However the advent is teaching us to be prepared, for the ever coming of Christ to us in every Christmas.

St. Bernard in his sermon on Advent speaks of three fold coming of the Lord, "We have come to know a threefold coming of the Lord. The third coming takes place between the other two. The two are clearly manifested, but the third is not. In the first coming the Lord is seen on the earth and lived among men in the days when, as he himself bears witness, they saw him and hated him. In his last coming 'all flesh shall see the salvation of our God,' and 'they shall look on him whom they have pierced'. The other (third) coming is hidden. In it, only the chosen see him within themselves and their souls are saved. In brief, his first coming was in the flesh and in weakness, the intermediary coming is in the spirit and in power, the last coming will be in glory and majesty.This intermediary coming is like a road leading from the first to the last coming. In the first coming Christ was our redemption, in the last he will appear as our life, in the intermediary coming he is our rest and consolation". (Ser.5 on Advent).

The liturgical colour for Advent is violet and the season is somewhat penitential similar to lent, but not so explicit and emphatic. The character of worship during Advent is more solemn and quiet. Though the use of colour violet expresses penitence in Advent, it expresses more of expectant hope and royalty.

In Western countries, the Sundays of the Advent are celebrated with the lighting of candles. They keep in a wreath four candles. Four candles represent the expectations of different personalities of the salvation history. They are lit each Sunday. It is a way of catechizing people on the celebration of Advent. Each week a child is called to go to the altar to light a candle. When the candle is lit, they sing a hymn asking the Lord to come



பங்குத்தந்தை கபிரியேல் அவர்களும், அன்பியப் பணிக்குழுச் செயலர் தந்தை A. அல்போன்ஸ் அவர்களும் இணைந்து திருப்பலி நிறைவேற்றினர். மறையுரையிலேயே அன்பியத்தின் அவசியம் பற்றி செயலர் உரையாற்றினார். 15.10.2019 அன்று இறைபதம் சேர்ந்த மக்கள் ஆயர் மேதகு அந்தோணி டிவோட்டா அவர்களுக்கு திருப்பலி நடுவில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

காலை 9.30 மணிக்கு 12 அன்பியங்களிலிருந்து 35 நபர்கள் பங்கேற்க ஆர்வமுடன் வந்தனர். பங்குத்தந்தை அவர்கள் அனைவருக்கும் காலை உணவளித்தார். பின்னர் 10.15 மணிக்கு விவலியத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கருத்தரங்கம் ஆரம்பமானது. வேதியர் பன்னீர் செல்வம் தொடக்க வழிபாடு நடத்தியதுடன் அன்பியத்தை உற்சாகமாக நடத்துவது, அனைத்து நிலையினரையும் ஆர்வமுடன் பங்கேற்கச் செய்வது பற்றியும், அன்பியப் பொறுப்பாளர்கள் 7 பேரின் பணிகள் குறித்தும் உரையாற்றினார்.

அன்பியச் செயலர் தந்தை A. அல்போன்ஸ் அவர்கள் பங்கில் நடைபெறும் அன்பியங்கள் பற்றியும், அவர்களின் தேவைகளைப் பற்றியும் கலந்துரையாடினார். தொடர்ந்து அன்பியங்கள் சிறப்பாக செயல்பட வழிமுறைகள் வழங்கினார். நண்பகல் 12.15 மணிக்கு அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

அருள்பணி. A. **அல்போன்ஸ்**, செயலர்

## அருள்தந்தை வீரமாமுனிவர் திருவுருவச் சிலை திறப்பு விழா மற்றும் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

வீரமாமுனிவரின் சீரிய முயற்சியால் மன்னன் சந்தாசாகிப்பிடமிருந்து தானமாகப் பெற்ற இடத்தில் பாலக்கரைப் பகுதியில் புனித வியாகுல அன்னைக்கு அழகிய ஆலயம் கண்டார் வீரமாமுனிவர். அவருடைய பாதம் பட்ட பெருமைக்குரிய எம் பழையகோவில் தலத் திருஅவையில் அவருடைய பிறந்த நாள் விழாவை நவம்பர் 8-ஆம் தேதி 'முன்னோர்கள் தினமாகக்' கொண்டாடினோம். பங்கில் வளர்ச்சிக்காக உழைத்து மரித்த ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவறத்தார், இறைமக்கள் ஆகியோருக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தியும், இறந்த அவர்களுடைய ஆன்மாக்கள் இறைவனில் இளைப்பாறவும் சிறப்பு திருப்பலியானது அருள்பணி. ஜோசப், பங்குத்தந்தை, அருள்பணி. மரிய சூசை, உதவிப் பங்குத்தந்தை, அருள்பணி. அந்தோணி ரமேஷ், இளைஞர் பணிக்குழு செயலர், அருள்பணி. பீட்டர், மதுரை ஆகியோரால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலிக்குப் பின் வீரமாமுனிவரைப் பற்றிய சிறப்புரை நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிதாக ஆலய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அருள்தந்தை. வீரமாமுனிவரின் திருவுருவச் சிலையானது புனிதப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அன்பிய ஒருங்கிணைப்பாளர்

விவிலிய வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை கையிலேந்தியும், விவிலிய பாடல்களை பாடிக்கொண்டும் பவனியில் கலந்து கொண்டனர். பீடத்தின் முன் அலங்கரிக்கப்பட்ட அரியணையின் மீது திருவிவிலியம் வைக்கப்பட்டு, தீப, தூப, மலர் அஞ்சலி செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சிறுவர், சிறுமியர், பங்கு மக்கள் தங்களது சிறப்பான பங்களிப்பை நல்கினர். விவிலியத்தின் முக்கியத்துவம் பற்றி பங்குத்தந்தை அவர்கள் மறையுரையில் விளக்கிக் கூறினார்கள். விவிலிய ஞாயிறு திருப்பலி சிறப்பாக நிறைவு பெற்றது. அன்று மாலை 6.00 மணியளவில் விவிலியப் போட்டிகள் சிறுவர், சிறுமியர் மற்றும் பெரியோர்களுக்கென்று தனித்தனியாக நடத்தப்பட்டன. சேர்வைட் அருள்சகோதரிகள் இருவர், தூய அன்னாள் அருள்சகோதரி ஒருவர், ஆகிய மூவரும் நடுவர்களாக இருந்து போட்டிகளை வழிநடத்தினர். இறுதியாக போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்கு பங்கு மக்களில் ஒருவரான திரு. சவரிமுத்து ஆசிரியர், திரு. ஜேம்ஸ் இம்மானுவேல் மற்றும் அருள்சகோதரி. மெர்சி (சேர்வைட்) ஆகியோர் பரிசுகளை வழங்கி ஊக்குவித்தனர். இறுதியில் திருமதி. கரோலின் அவர்கள் நன்றியுரை நவில விழா இனிதே நிறைவு பெற்றது.

## நினைவேந்தல் திருப்பலி

20-10-19 ஞாயிறு அன்று திருச்சி மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு அந்தோணி டிவோட்டா அவர்களுக்கு நினைவேந்தல் திருப்பலி எம் பங்குத்தந்தை அருள்திரு. S. லூயிஸ் பிரிட்டோ அவர்களால் பங்கு ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டது. திருப்பலியில் பீடத்தின் முன் ஆயர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலி முன்னுரையில் பங்குத்தந்தை அவர்கள் ஆயர் அவர்கள் நம் மறைமாவட்டத்திற்கு செய்த பணிகள், செய்த உதவிகள் குறித்து விளக்கி கூறினார்கள். இத்திருப்பலியில் பங்கு மக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருப்பலி முடிந்தவுடன் ஆயர் அவர்களின் உருவப்படத்திற்கு மக்கள் வரிசையாக வந்து அஞ்சலி செலுத்தினர். இதே போன்று எம் பங்கின் அனைத்து கிளைப்பங்குகளிலும் ஆயர் அவர்களுக்கு நினைவேந்தல் ஞாயிறு திருப்பலிக்குப்பின் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது.

பங்கு அலுவலர்

## பாத்திமா நகரில் அன்பியப் பொறுப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம்

20.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று பாத்திமா நகர் பங்கில் அன்பியப் பொறுப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. காலை 8.00 மணிக்கு



down to shower His blessings as the dew comes from the heavens. In the first week the lit candle represents the expectations of the patriarchs beginning with Abraham, the second week candle represents the expectations of prophet Isaiah, who speaks very much of the messianic age and its transformations of the world, the third week candle represents the expectation of the John the Baptist who longed for him and asked people to repent for the coming of the Messiah. The fourth week candle represents the expectations of Mary and Joseph for the Messiah.

Towards the end of Advent (17-24) we have eight days of intense preparations for the coming of the Lord. It has special prayers which make us to long for the coming. The readings are taken from the infancy narratives of the Gospels from Matthew and Luke, the events proceeding the birth of Jesus such as genealogy, vision to Joseph, vision to Zachariah in the temple, Annunciation, Visitation, Mangificat, Birth of John the Baptist, and the prophecy of Zachariah.

Let us look up to the heavens during Advent and prepare ourselves for the coming of the saviour who would free us from anxieties, fears and uncertainties of life and offer us, hope, peace, joy and love. Let us remember the words of the Book of Revelation, "Behold, I am at the door and knock; if any one hears my voice and opens the door, I will come into him and eat with him and he with me" (Rev 3:20). As the early Christians were waiting for the Messiah said "Maranatha" "Come Lord Jesus," let us also join with them and say, "Come Lord Jesus". The Lord would reply to us "And let him who is thirsty 'come', let him who desires take the water of life without price" (Rev 21:17b).

I wish you a very happy X'mas and a Bright New year 2020.

God bless you!

**Most Rev. Dr. M. Devadass Ambrose**
Apostolic Administrator of Tiruchirapalli

## THE APOSTOLIC ADMINISTRATOR'S PROGRAMME, DECEMBER - 2019

| | |
|---|---|
| 4 | Holy Redeemer's Basilica, Trichy |
| 8 | Diocesan Feast - Trichy |
| 11 | Blessing of the Presbytery - Sathampatty |
| 16 | Blessing of Chapel - Periyakulathupatty |
| 17 | Christmas Celebration - Trichy |
| 27 | Bishop's House - Trichy |

For appointments with the Apostolic Administrator, please contact the secretary, Fr. Sebastian. Cell No. 94438 12344.

## INFORMATIONS FROM THE APOSTOLIC ADMINISTRATOR

### DIOCESAN PATRONESS FEAST

The celebration of the Diocesan Patroness Feast - Our Lady of Immaculate Conception - will be on the 8th of December 2019, Sunday, at 05.30 p.m. at St. Mary's Cathedral, Melapudur, Trichy. Kindly inform your congregation well in advance and ask them to participate in the celebration to thank the Lord for the gifts received. May I ask you to cancel the evening mass on that Sunday. During the celebration, the Silver and Golden Jubilee couples of this year will be honoured. Kindly follow the instructions of Fr. Alphonse, the Director, Diocesan Pastoral Centre, dated 19th November 2019 sent to your postal address for registration of Jubilarians. For any clarification regarding the registration of the Jubilarians, please contact Fr. Alphonse.

### CHILD PROTECTION CELL

As per the direction of the Holy See, each diocese is to have a stable office to receive complaints against the child abuse cases. In our diocese, the office of the diocesan tribunal would function, in addition to its present ministry, as **"Child Protection Cell"** in order to protect the rights of the children from 01.06.2020



கொள்ள, அவர்களுக்கு விழிப்புணர்வு கொடுத்து வழிநடத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. செல்வம்,** தலைவர்

மறைக்கல்விப் பணிக்குழு

## மறைக்கல்வி – நன்னெறிக்கல்வி

மறைக்கல்வி நன்னெறிக்கல்வி ஊக்கப்படுத்தும் பணியானது கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் நடைபெற்றுக் கொண்டுள்ளது. இதுவரை ஊக்கப்படுத்தப்பட்ட பள்ளிகள் விபரம் தொடர்ச்சி : 36. கேம்பியன் ஆங்கிலோ - இந்தியன் மே.நி.பள்ளி, கண்டோன்மென்ட், 37. அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளி, ரெங்காநகர், 38. திருச்சிலுவை மெட்ரிக் மே.நி.பள்ளி, சோமரசம்பேட்டை, 39. மாண்ட்போர்ட் மே.நி.பள்ளி, காட்டூர், 40. புனித தெரசாள் உ.நி.பள்ளி, விராலிமலை, 41. புனித தெரசாள் தொ.பள்ளி, விராலிமலை. இப்பணி நடைபெற மறைக்கல்வி பணிக்குழுவிற்கு ஒத்துழைப்புக் கொடுத்த தாளாளர்கள், தலைமையாசிரியர்கள், மறைக்கல்வித் தொடர்பாளர்கள் மற்றும் மாணவ மாணவியருக்குப் பணிக்குழுவின் பாராட்டும், வாழ்த்துக்களும்.

**9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பள்ளி அளவிலான தேர்வுகள்** : நம் கத்தோலிக்கப் பள்ளிகளில் பயிலும் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணாக்கருக்கு மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி (பள்ளி அளவில்) தேர்வு 22.11.2019 வெள்ளியன்று அந்தந்தப் பள்ளிகளில் நடைபெற்றது. இத்தேர்வு 67 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் நடைபெற்றது.

மேலும் இவர்களுக்கான சிறப்புத்தேர்வு (மறைமாவட்ட அளவில்) திருச்சி, கீரனூர், மறைவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு நல்லாயன் நிலையத்திலும், மணப்பாறை மறைவட்டப் பள்ளிகளுக்கு புனித லூர்தன்னை ஆலயத்திலும் 03.12.2019 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அருள்பணி. **விக்டர் ஜெயபாலன்,** செயலர்

பேரூர் பங்கு

## விவிலிய வாரக் கொண்டாட்டம்

29.09.19 ஞாயிறு அன்று விவிலிய ஞாயிறு சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 8.30 மணியளவில் எம் பங்குத்தந்தை அருள்திரு. லூயிஸ் பிரிட்டோ அவர்கள் தலைமையில் கோயில் வளாகத்தைச் சுற்றி விவிலிய பவனி நடைபெற்றது. மறைக்கல்வி சிறுவர், சிறுமியர்

## தென் இந்திய மறைமாவட்ட அன்பியச் செயலர்களின் கலந்துரையாடல் நிகழ்வு

தென் இந்திய மறைமாவட்ட அன்பியச் செயலர்களின் கலந்துரையாடல் நிகழ்வு கன்னியாகுமரி மாவட்டம் கோவளம் சாலை "தோழமை" இல்லத்தில் 13.11.2019 புதன்கிழமை நடைபெற்றது. ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, கேரளா மற்றும் தமிழ்நாட்டிலிருந்து ஏறக்குறைய 30 அருள்பணியாளர்களும், சில பொதுநிலை செயலர்களும் கலந்து கொண்டனர்.

அருள்பணி. முனைவர் தமாசின் அவர்கள் அன்பியங்களுக்கான இறை இயலை இறைவாக்கினர் எசேக்கியேல் மற்றும் மலாக்கியாவின் பின்புலத்தில் விளக்கினார். அடிப்படை திருஅவைக்குழுக்கள் (Basic Ecclesial Communities) சாதித்துள்ள வெற்றிகள், திருஅவையிலும், பொது சமூகத்திலும் அன்பியங்கள் ஏற்படுத்தியுள்ள நேர்மறைத் தாக்கங்கள் போன்றவை பகிரப்பட்டன. மேலும் அன்பியங்கள் எதிர்கொள்ளக்கூடிய சவாலான சூழ்நிலைகளும், அதை மேற்கொள்வதற்கான சில யுக்திகள் மற்றும் ஆலோசனைகள் பரிமாறிப்பட்டன. தமிழக அன்பியப் பணிக்குழுத் தலைவர் மேதகு ஆயர் அமல்ராஜ் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தார். திருச்சி மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுச் செயலர் அருள்பணி. A. அல்போன்ஸ் அவர்கள் கலந்து கொண்டார்.

செயலர்

## கிறிஸ்தவத் தொழிலாளர் இயக்கத் தேசியப் பொதுக்குழுக் கூட்டம்

கிறிஸ்துவத் தொழிலாளர் தேசிய இயக்கக் கூட்டமானது, செப்டம்பர் மாதம் 26, 27, 28 ஆகிய தேதிகளில் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள ஹான்சல் என்ற ஊரில் புனித சேவியர் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் தமிழகம், பாண்டிச்சேரி, உத்திரப்பிரதேசம், கேரளா, கர்நாடகா உள்பட பல மாநிலங்களிலிருந்து 30க்கும் மேற்பட்ட மறைமாவட்டத் தலைவர்கள், செயலர்கள் ஆன்மீக ஆலோசகர்கள் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டக் கிறிஸ்துவத் தொழிலாளர் இயக்கத் துணை தலைவர் நெக்ஸிடர் அடைக்கலராஜ் அவர்கள் கலந்து கொண்டார்.

அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, ஒவ்வொரு மறைமாவட்டத்திலும், குறிப்பாக கிளைப்பங்குகளிலும் நமது இயக்கத்தைத் தொடங்கவும், உறுப்பினர்களின் எண்ணிக்கையை பெருக்கவும் அவர்களுக்கு, அரசு உறுதியளித்துள்ள உரிமைகளையும், உதவிகளையும் அவர்கள் பெற்றுக்



## CHRISTMAS CELEBRATION

The Christmas celebration will be held on 17th December 2019, Tuesday, at the Cathedral Basement Hall. All the Diocesan Priests and the Religious priests working in the parishes are cordially invited for this celebration.

**Programme :**

| | |
|---|---|
| 10.00 a.m. | Arrival & Coffee |
| 10.30 a.m. | Spiritual Talk |
| 11.30 a.m. | Adoration & Confessions |
| 12.30 p.m. | Distribution of Christmas gifts & Lunch |

**+ Most Rev. Dr. M. Devadass Ambrose**
Apostolic Administrator

## மறைமாவட்ட முதன்மைச் செயலரிடமிருந்து...

திருச்சி மறைமாவட்டத்தில் வழக்கம்போல் இந்த ஆண்டும் அருந்ததியர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் மாணவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பங்கள் தேவைப்படின், பங்குத்தந்தையர்கள் என்னிடம் தொடர்பு கொள்ளவும். நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் நல்லாயன் நிலைய அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.12.2019, செவ்வாய்க்கிழமை. உதவித்தொகை வழங்கப்படும் நாள் அஞ்சல் அட்டை வழியாக பிறகு அறிவிக்கப்படும்.

அருள்பணி. **அ. ஜெயராஜ்,** முதன்மைச் செயலர்

## FROM THE DESK OF THE FINANCIAL ADMINISTRATOR

Dear Fathers,

Kindly send the Mission Sunday Collections from your Parish/ Institution before 15th of December 2019.

**Fr. S. Innasimuthu,** Financial Administrator

## FROM THE OFFICE OF THE PROPAGATION OF FAITH

Your Excellency,

I would like to acknowledge receipt of the Financial Report of the Diocese of Tiruchirapalli for the fiscal year 2018-2019 which you forwarded to this Dicastery.

This Missionary Dicastery is grateful for your efforts in properly administering the temporal goods of the Local Church as the report reflects a credit balance for the year in review.

In thanking you for sending the Report, I extend assurances of respectful esteem, and remain,

Sincerely yours in Christ,

## INFORMATION FROM THE APOSTOLIC NUNCIATURE

Your Eminence,

His Eminence Timothy Michael Cardinal Dolan, Archbishop of New York has informed this Apostolic Nunciature that he has received a request for Mass intentions or Mass Stipends from an individual identifying himself as Fr. Dr. Joseph Arulappan, Founder and Superior General of the *"Missionaries of Christ Fathers Sisters and Lay Missionaries"*.

According to the Archdiocese of Hyderabad, where this Congregation purports to reside, no such religious community exists. The CRI has not registered the name of this so called "Congregation" in its database and it appears to be fake.

I inform Your Eminence to alert the Arch/Bishops about this institution.

Assuring my prayer for Your Eminence and for your Pastoral Ministry, I remain

Devotedly yours in the Lord,

+ Giambattista Diquattro
Apostolic Nuncio



கலந்துகொண்டனர். குழந்தை வளர்ப்பு, இயற்கை மருத்துவம், போதை மறுப்பு, படுக்கை நோயாளிகள் பராமரிப்பு மற்றும் இதயம் சார்ந்த பல்வேறு நோய்கள் பற்றிய விழிப்புணர்வு செய்திகள் பல மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பங்கு, மறைவட்டம் மற்றும் மறைமாவட்டம் அளவிலான நலவாழ்வுப் பணிக்குழு பொறுப்பாளர்கள் உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது. அதேபோல, ஒவ்வொரு ஆண்டும் புனித லூர்து மாதா திருநாளான பிப்ரவரி 11-ஆம் தேதி நலவாழ்வு நாளாக பங்குகளில் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. நமது மறைமாவட்டம் சார்பாக இப்பயிற்சியில் பங்கேற்ற நல்உள்ளங்களுக்கு பணிக்குழு சார்பாகவும் இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருள்பணி. **ஜோசப் அருள்ராஜன்**, செயலர்

அன்பியப் பணிக்குழு

### தமிழக அன்பியச் செயலர்கள் கூட்டம்

தமிழக அளவில் மறைமாவட்ட அன்பியச் செயலர்களுக்கான ஒருநாள் ஆலோசனைக் கூட்டம் 14.11.2019 வியாழன் அன்று கன்னியாகுமரி கோவளம் சாலை "தோழமை" இல்லத்தில் நடைபெற்றது. தமிழக அன்பியப் பணிக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் அமல்ராஜ் அவர்கள் தலைமை தாங்கினார்.

2020-ம் ஆண்டை தமிழக திருஅவை இளைஞர் ஆண்டாக கொண்டாட இருக்கின்ற பின்புலத்தில், தமிழக இளைஞர் பணிக்குழு தலைவர் மேதகு ஆயர் சூசை நசரேன் அவர்கள் கருத்துரை வழங்கினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் "கிறிஸ்து வாழ்கிறார்" என்ற திருத்தூது ஊக்கமடலின் ஒளியில் அன்பியங்களில் இளைஞர்களின் பங்கு பற்றியும், திருஅவையில் இளைஞர்களுக்கான முதன்மை, முக்கியத்துவம் வழிகாட்டுதல் ஆகியவற்றை விளக்கினார்.

தமிழக இளைஞர் பணிக்குழுவின் செயலர் அருள்பணி. மார்ட்டின் ஜோசப் அவர்கள் இளைஞர் ஆண்டுக்கான செயல் திட்டங்கள் பற்றியும், அன்பியங்களும் இளைஞர் இயக்கமும் இணைந்து செயல்படக் கூடிய தளங்களையும் கோடிட்டுக் காட்டினார். இந்நிகழ்வில் ஏறத்தாழ 16 அருள்பணி செயலர்கள் பங்கேற்றனர். திருச்சி மறைமாவட்டச் செயலர் அருள்பணி. A. அல்போன்ஸ் அவர்கள் கலந்து கொண்டார்.

தலைவர் S. அல்போன்ஸ், கியூரியா மற்றும் பிரசீடிய ஊர் மக்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை சகோ. ரீட்டா சிறப்பாக செய்திருந்தார்.

திருவளர்ச்சிப்பட்டி (செம்பட்டு பங்கு) விண்ணரசி மாதா (க) பிரசீடியம் 10.10.2019ல் மாலை வேளையில் நடத்தியது. இதில் பங்குத்தந்தை ஆரோக்கியசாமி O.Pream, அருள்பணி. ஜான் பிரான்சிஸ், அருள்பணி. பெலிக்ஸ், கொமிசிய அலுவலர்கள் S. அல்போன்ஸ், P. ஜோ, J. ஜான்பீட்டர், முன்னாள் து.தலைவர் A.S. ஜார்ஜ், சலேத் செல்வி, ரீட்டா மற்றும் பலர் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளுடன் விழா ஏற்பாடுகளை சகோ. ஜெசிந்தா சிறப்பாக செய்திருந்தனர்.

S. **அல்போன்ஸ்,** மறைமாவட்டத் தலைவர்

இளைஞர் பணிக்குழு

**இளைஞர் பணிக்குழு இயக்குநர், களப்பணி சகோதரர் மற்றும் இயக்க நிர்வாகக் குழுவினரின் பங்கு இயக்கச் சந்திப்பு**

நவம்பர் மாதத்தின் 09ஆம் தேதி (சனி) ந. பூலாம்பட்டி கிளைப்பங்கான தோப்புப்பட்டி, 10-ஆம் தேதி (ஞாயிறு) வையம்பட்டி, 17ஆம் தேதி (ஞாயிறு) நாகமங்கலம், 24ஆம் தேதி (ஞாயிறு) பூலாம்பட்டி பங்கு மற்றும் 30ஆம் தேதி (சனி) கீரனூர் கிளைப்பங்கான இலட்சுமணப்பட்டியில் இயக்கச் சந்திப்பு நடைபெற்றது. வாய்ப்புக் கொடுத்த பங்குத்தந்தையர்கள் மற்றும் தூய பவுல் குருமட சகோதரர்களுக்கு நன்றிகள்.

நலவாழ்வுப் பணிக்குழு

**நலவாழ்வு விழிப்புணர்வு பயிற்சி கருத்தரங்கம்**

மறைமாவட்ட நலவாழ்வுப் பணிக்குழு செயலர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான மாநில அளவிலான நலவாழ்வு விழிப்புணர்வு பயிற்சி கருத்தரங்கம் நவம்பர் 18 மற்றும் 19 (திங்கள், செவ்வாய்) ஆகிய இரு தேதிகளில் திருச்சி, அரியமங்கலம், குளுனி மாநில தலைமையகத்தில் நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வுப் பணிக்குழு தலைவர் ஆயர் **ஜார்ஜ் ராஜேந்திரன்** (சீரோ மலபார் ரீதி, தக்கலை) தலைமை தாங்க, 60க்கும் மேற்பட்டோர் இப்பயிற்சிப் பாசறையில் பங்கேற்றனர்.



திருச்சி மறைமாவட்டம் சார்பாக, மறைமாவட்ட நலவாழ்வுப் பணிக்குழு செயலர் அருள்பணி. முனைவர் ஜோசப் அருள்ராஜன் உட்பட 10 நபர்கள் (ஆண்கள் 6 + பெண்கள் 4)



# இந்த மாதம் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

**குடும்பநலப் பணிக்குழு**

**திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்:**

14, 15 - நல்லாயன் நிலையம், திருச்சி

21, 22 - மணப்பாறை

**பெண்கள் பணிக்குழு**

5, 19 மையக்குழு கூட்டம், நல்லாயன் நிலையம்

13 செயற்குழு, பொதுக்குழு கூட்டம், பிராட்டியூர்

16 கிறிஸ்துமஸ் விழா மையக்குழு உறுப்பினர்கள் பணிக்குழுக்கள் இயக்குநர்

**அருங்கொடை இல்லம்**

- ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை உபவாச செபக்கூட்டம் நடைபெறும்.
- ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை குணமளிக்கும் ஆராதனையும், திருப்பலியும் நடைபெறும்.
- இம்மாதம் முழு இரவு செப வழிபாடு 20.12.2019 மூன்றாவது வெள்ளிக் கிழமை நடைபெறும்.
- அருங்கொடை இல்லத்தினரின் வெளி ஊழியங்கள் : இந்தியன் பேங்க் காலனி, அம்பிகாபுரம், கோளார்பட்டி, என்.குட்டப்பட்டு, சோமரசம்பேட்டை.

**சிறப்பு நிகழ்வுகள் :**

- இறை இரக்கத்தின் திருப்பலி 06.12.2019 மாதத்தின் தலை வெள்ளி அன்று காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை நடைபெறும்.
- ஒவ்வொரு மாதமும் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமை வழிபாடுகள் மூன்று அமர்வுகளாக நடைபெறும். முதல் அமர்வு காலை 10 மணி முதல் 1 மணி வரை 2வது அமர்வு 2 மணி முதல் 5 மணி வரை 3வது அமர்வு மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை ஆங்கிலத்தில் நடைபெறும்.
- அக்டோபர் மாதம் செபமாலை அன்னைக்கு தொடர் செபமாலையாக ஏழு நாட்கள் சொல்லப்பட்டது. அனேகர் வந்து செபித்தார்கள்.
- இதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக் கிழமை காலை 10.00 முதல் மாலை 4.00 மணி வரை உபவாச நற்கருணை ஆராதனையோடு செபமாலை செபிக்கப்பட்டு திருப்பலியுடன் நிறைவு பெறும்.

**பாலர் சபை**

**வழிகாட்டி ஆசிரியர்களுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்**

நாள் : 05.12.2019, வியாழன்

நேரம்: காலை 10.30 மணி to 1.00 மணி

இடம் : நல்லாயன் நிலையம்

தலைமை : அருள்பணி. **செபாஸ்டின்,** ஆயரின் செயலர், திருச்சி

மறைமாவட்டச் **செய்திகள்**

## மறைமாவட்டக் கல்வி உதவித்திட்டம் – 2019

திருச்சி மறைமாவட்டக் கல்வி உதவித்திட்டத்தின் கீழ், 2019ம் ஆண்டு மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும் 637 மாணவ-மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகையாக ரூபாய் 11,94,000 மறைமாவட்டத்தின் சார்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வு திருச்சி நல்லாயன் நிலையம் மற்றும் மணப்பாறை, புனித லூர்தன்னை ஆலயத்தில் நவம்பர் 16, 17, 23 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

இத்தொகையை வழங்க அனுமதியும் ஆசியும் அளித்த அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் மேதகு தேவதாஸ் அம்புரோஸ் ஆண்டகை, உதவிக்கரம் கொடுத்த நினைவில் வாழும் அருள்பணி. பேட்ரிக் ஐசக், ஊக்கமும் உற்சாகமும் அளித்த மறைமாவட்டப் பொருளாளர் அருள்பணி. இன்னாசிமுத்து, நிகழ்ச்சிகளில் பங்கேற்று மாணவர்களுக்கு ஆலோசனையும் ஆசியுரையும் வழங்கிய மறைவட்ட அதிபர்கள் அருள்பணி. ஜோ லாரன்ஸ், அருள்பணி. மைக்கிள் ஜோ, அருள்பணி. ஆரோக்கிய சுந்தரராஜ், அருள்பணி. அருளானந்தம், அருள்பணி. சகாய ஜெயக்குமார் மற்றும் அலுவலகப் பணிகளில் உதவிய நல்லாயன் நிலைய அலுவலகப் பணியாளர்கள், வேதியர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

அருள்பணி. **அ. ஜெயராஜ்,** முதன்மைச் செயலர்

குடும்பநலப் பணிக்குழு

## மதிப்பீட்டுக் கல்வி

10-10-19 புனித ஆரோக்கியன்னை மேல்நிலைப்பள்ளி, கீரனூர், கலந்து கொண்டவர்கள் 210 பேர். 11-10-19 புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி, அய்யம்பட்டி, கலந்து கொண்டவர்கள் 63 பேர். 25-10-19 லிட்டில் பிளவர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மணப்பாறை, கலந்து கொண்டவர்கள் 62 பேர். 7-11-19 உலக மீட்பர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருச்சி, கலந்து கொண்டவர்கள் 730 பேர்.

திருச்சி மறைமாவட்டத்தைச் சார்ந்த இந்த நான்கு பள்ளிகளிலும், 9ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை 9 மணி முதல் 1 மணி வரை வாழ்க்கைக் கல்வி, வாழ்க்கையின் குறிக்கோள், பாலியியல் கல்வி, பெற்றோர், பிள்ளைகளிடையே உள்ள உறவு நிலை, தொலைத் தொடர்பு சாதனங்களில் ஏற்படக் கூடிய பின் விளைவுகள் பற்றியும் கருத்துக்கள் கொடுக்கப்பட்டன. பின் மாணவ, மாணவிகளின் சந்தேகங்களுக்குப் பதில் அளிக்கப்பட்டது. இதன் மூலம் மாணவ, மாணவிகள் பயன் அடைந்ததாக மதிப்பீடு அளித்தார்கள்.



மரியாயின் சேனை

## பொறுப்பாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி

திருச்சி மறைமாவட்ட அனைத்து கியூரியா, பிரிசீடிய பொறுப்பாளர் பயிற்சி முகாம் 20.10.2019 ஞாயிறு நல்லாயன் நிலையத்தில் நடைபெற்றது. அருள்பணி. A. ஜெயராஜ், கொமிசிய ஆன்ம இயக்குநர் அவர்கள் திருப்பலி ஒப்புக் கொடுத்து, பயிற்சியின் தொடக்கவுரையாற்றி வாழ்த்தினார்.

தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் கடமையும் - செயல்பாடும் பற்றி காலேஜ் (க) பிரிசீடிய முன்னாள் தலைவர் சகோ. R. தனீசுரெத்தினம், செயலாளர், பொருளாளர் - கடமையும், செயல்பாடும் பற்றி எடமலைப்பட்டிபுதூர் (க) பிரசீடிய முன்னாள் தலைவி சகோதரி A. அமலோற்பவ ஜெயந்தி, சேனை வளர்ச்சியும், பொறுப்பாளர்களின் கடமையும் - செயல்பாடுகளும் பற்றி கொமிசிய விரிவாக்க ஒருங்கிணைப்பாளர் Bro. J. ஜான்பீட்டர் ஆகியோர் சிறப்பாகக் கருத்துரை வழங்கினர்.

பயிற்சியின் தொகுப்புரையை கொமிசியத் தலைவர் S. அல்போன்ஸ் வழங்கவும், நிகழ்ச்சி ஏற்பாடுகளை கொ.து. செயலர் S. ஜோசப்ராஜ் செய்ய, வருகை தந்த அனைவரையும் து.தலைவர் Bro. P. ஜோ வரவேற்றார். நிறைவாக பொருளர் Sr. D. செல்வநாயகி நன்றி கூறினார். பயிற்சியில் 155 பொறுப்பாளர்கள் கலந்து பயனடைந்தனர்.

### மறைமாவட்டப் புதிய செயலாளர் தேர்தல்

கொமிசியத்திற்கான புதிய செயலாளர் தேர்தல் 20.10.2019 கொமிசியக் கூட்டத்தில் தலைவர் S. அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது. உலக மீட்பர் பங்கு (ஆ) பிரசீடிய சகோதரர் செல்வராஜ் அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தலைவர் அறிவித்தார்.

### கிளைப் பிரசீடியங்களின் 500வது, 1500வது வாரவிழா

மாத்தூர் பங்கு விடிவெள்ளி மாதா, தனது 500வது வார விழாவை 22.09.19ல் சிறப்பாக நடத்தியது. இதில் மறைமாவட்ட ஆன்ம இயக்குநர் தந்தை A. ஜெயராஜ், பங்குத்தந்தை G. ஆரோக்கிய அமல்ராஜ், கொமிசியத்

**08.11.19 அன்று சோமரசம்பேட்டை பங்கு மேலச் சவேரியார் புரம் அருகிலுள்ள அன்னை மரியாள் அன்பியத்தின் முதல் ஆண்டு விழாவில் பங்குத்தந்தை அருள்பணி. எட்வர்டு ராஜாவுடன் அன்பியச் செயலர்**



**2019 நவம்பர் 13 அன்று கன்னியாகுமரி தோழமை இல்லத்தில் நடைபெற்ற தென்இந்திய மறைமாவட்ட அன்பியச் செயலர்கள் கலந்துரையாடல் கூட்டம்**



**14.11.19 அன்று கன்னியாகுமரி தோழமை இல்லத்தில் நடைபெற்ற தமிழக அன்பியப் பணிக்குழு செயலர்கள் கூட்டத்தில் நம் பணிக்குழு செயலரும் கலந்து கொண்டார்.**



தொடர்புக்கு : வேதியர் திரு. **பன்னீர் செல்வம்**

செல் : 87780 28442



# புதுவழி திருஅவை @ அன்பியங்கள்

## ஷேப்ப் பெர்ட்டே ஜூசஸ்

இறை இயேசுவில் பேரன்புக்குரியவர்களே!



பிஞ்சுக் குழந்தையை கொஞ்சி மகிழும் பேருவுவகையை அனுபவிக்காதவர் அகிலத்தில் எவரும் இலர். மழலைச் சிரிப்பில் மனதை பறிக்கும் மந்திரச் சக்தி குழந்தைகளுக்கு மட்டுமே உண்டு. ஊருக்கு ஒதுக்கு புறமாய், பெத்தலேகேமில் உள்ள மாடடை குடிலில் விண்ணவர்களின் தாலாட்டுக்கு மத்தியில், மரியின் பூ மடியில் பூத்துக் குலுங்கும் குழந்தை இயேசுவை கண்டு மகிழ வேண்டும் கண்கள் கோடி.

**மானிடப் பிறப்பையும் மகிழ்ச்சியையும் பிரிக்க முடியாது**. உன்னத்ததையும் விண்ணகத்தையும் உண்டாக்ககூடிய தேவாதி தேவன் மனுக்குலத்திற்கு குழந்தை இயேசுவின் பிறப்பால் கொடுத்ததும் **மகிழ்ச்சியே!**

லூக் 2:10-11ல் லூக்கா பதிவு செய்கிறார்; வானதூதர் இடையர்களிடம், “அஞ்சாதீர்கள்; இதோ, எல்லா மக்களுக்கும் **பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை** உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்”.

இதையே இறவாக்காவியமாகிய இயேசு காவியத்தில் கவிஞர் கண்ணதாசன் இப்படி பாடுகிறார்.

எத்தனை உண்மை வந்து பிறந்தது<br>
    **இயேசு பிறந்ததினிலே!**<br>
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது<br>
    இயேசுவின் வார்த்தையிலே!

இன்னும் ஒருபடி மேலே சென்று, ‘**மார்கழித் திங்கள் அல்லவா!**’ என்னும் திரை இசையில் வந்த பக்தி பாசுரம், தெய்வக் குழந்தையின் திருக்காட்சிக்காக இப்படி ஏங்குகிறது.

மார்கழித் திங்கள் அல்லவா!

மதி கொஞ்சும் நாளல்லவா!

இது கண்ணன் வரும் பொழுதல்லவா!

**ஒருமுறை உனது திருமுகம் பார்த்தால்**

**நிலைபெறும் உயிரல்லவா!**

கிறிஸ்து பிறப்பதற்கு 750 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இறைவாக்கினர் எசாயா இயேசுவின் பிறப்பில், இகமதில் என்ன நிகழும் என்பதை தன் நூல் 35:10bல் எடுத்தியம்புகிறார்;

அவர்கள்முகம் என்றுமுள

மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும்

**அவர்கள் மகிழ்ச்சியும் பூரிப்பும்**

**அடைவார்கள்;**

துன்பமும் துயரமும் பறந்தோடும்.

**எனவே**

கிறிஸ்துவின் பிறப்பு

நமக்கு கொண்டு வருவது **மட்டில்லா மகிழ்ச்சி!**

எல்லையற்ற இன்பம்!

ஒப்புயர்வற்ற உன்னதம்!

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும்தான்!

**எனவே,**

ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!

ஆனந்த சுகந்திரம் அடைந்து விட்டோமே!

என்ற புரட்சிக் கவி பாரதியின் பாடல் வரிகளில் இயேசுவின் பிறப்பால் நாம் பெற்ற விடுதலையை, வெற்றியை கொண்டாடுவோம்!

சாவுக்கு சமாதி கட்டியவர் இயேசு.

வாழ்வுக்கு வைகறையானவர் இயேசு

அடிமை விலங்கொடித்தவர் இயேசு

அன்புக்கு இலக்கணமானவர் இயேசு

அவரை கும்பிட்டு கொண்டாடி மகிழ்வதோடு நில்லாமல், அவர் காட்டிய வழியில், அவர் அடிச்சுவடுகளில் நடந்து, **இறையாட்சியை இகமதில் நிரல்படுத்த இன்றே சபதம் ஏற்போம்!**

## திருவருகை காலம் 3ம் ஞாயிறு
## நற்செய்தி மத்தேயு 11:2-6

**இறையாட்சியின் அடையாளங்கள்**

இறையாட்சியின் இன்றியமையாத அடையாளங்களாக விளங்குவது அன்பு, அமைதி, மகிழ்ச்சி, நீதி, நேர்மை, இரக்கம், மன்னிப்பு, சமத்துவம், சகோதரத்துவம் போன்றவைகளே. இம்மானுவேலாக (கடவுள் நம்மோடு குடியிருக்கிறார்) நம்மிடையே வாழ்ந்த ஆண்டவர் இயேசு இன்னும் சில அருங்குறிகளை இறையாட்சியின் அடையாளகளாக, இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகிறார்; "பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர். கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர்..."

ஆண்டவர் இயேசு கொண்டு வந்த இறையாட்சியை வளர்த்து நிறைவுபடுத்த வேண்டுமானால் நாம் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட வேண்டும் அதாவது, நாமல்ல; மாறாக நம்மில் கிறிஸ்துவே செயலாற்ற வேண்டும் (கலா 2:20). "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்" (உரோ 8:14). தூய ஆவியாரால் நிரப்பப்பட்டவர்கள் இறையாட்சியின் அடையாளமாகவும் செயற்பாட்டாளருமாக (சீடர்)மாறினர்.

1. **எலிசபெத்** : லூக் 1:41 "எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்".
2. **திருத்தூதர் பவுல்** : தி.ப. 9:17 "நீர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படவும்..."
3. **அன்னை மரியாள்** : லூக் 1:35 "தூய ஆவி உம்மீது வரும்..."
4. **ஆண்டவர் இயேசு** :

   அ) லூக் 3:21 "தூய ஆவி புறாவடிவில் தோன்றி அவர் மீது (இயேசு) இறங்கியது..."

   ஆ) லூக் 4:14 பாலைவனச் சோதனைக்கு பிறகு, "இயேசு தூய ஆவியின் வல்லமை உடையவராய் கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார்."

   இ) மாற்கு 9:7 "என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்குச் செவி சாயுங்கள்" (இயேசுவின் தோற்றம் மாறுதல்)

   ஈ) லூக் 4:17-21 "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது; ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்."

**தீர்மானத்திற்கு தூண்டுதலாக** : கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்படாதவர்கள் கடவுளின் மக்களாக வாழ முடியாது. சீடராகவும் மாற முடியாது. உலகின் ஈர்ப்புகளையும், பற்றுகளையும் மேற் கொள்ள முடியாது. "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்" (உரோ 8:14)

தூய ஆவியில் ஆட்கொள்ளப்படுவதற்கு (தூய ஆவியின் அனுபவம் பெறுவதற்கு) என்ன செய்யலாம்?